தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற, ஜப்பான் வாழ் தமிழர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஜப்பான் நாட்டில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு. கலாநிதி வீராசாமி,தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ், ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்ட

முன்னாள் முப்படை வீரர்கள் ஒருங்கிணைப்பு சங்க தென் மண்டல மாநாடு!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

தென்காசி,மே 30- தென்காசி மாவட்ட முன்னாள் முப்படை வீரர்கள் ஒருங்கிணைப்பு சங்கம் மற்றும் மாநில அளவிலான தென்மண்டல மாநாடு சங்கரன்கோவில் வணிக வைசிய சங்கம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பழனியப்பன் தலைமையில் மாவட்ட செயலாளர் செல்வராஜ் முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட தலைவர் முப்புடாதி வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் சுற்றுச் சூழல் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்.

சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் உள்ள வணிக வைசிய சங்கம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து தென்காசி மாவட்டம் முன்னாள் முப்படை வீரர்கள் ஒருங்கிணைப்பு சங்கம் மற்றும் மாநில அளவிலான தென் மண்டல மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுற்றுச் சூழல் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பங்கேற்று பேசியதாவது.

முன்னாள் ராணுவ வீரர்களுக்கு தமிழகத்தில் எத்தனை பேருக்கு பென்ஷன் வழங்கப்படாமல் இருக்கிறது அதில் என்ன பிரச்சினை என்பது குறித்து ஆய்வு செய்து,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.அதேபோல் வீட்டு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படுவது குறித்து கடந்த 8 மாதங்களாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். உயர் அதிகாரியிடம் பேசி வருகிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டு வருகிறார்.உயிரிழந்த படை வீரர் குடும்பத்தினருக்கு ரூபாய் 20 லட்சமாக இருந்து வந்த கருணை தொகையை 40 லட்சம் ஆக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே உயர்த்தி உள்ளார்கள்.

தமிழகத்தில் ஒரு லட்சத்து 87 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.இதில் குறிப்பாக ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 795 முன்னாள் படைவீடர்களும் 58,780 கைம் பெண்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காகதான் நீங்கள் வீட்டு வரி விலக்கு கேட்கிறீர்கள்.இது நகராட்சி மற்றும் ஊராட்சி துறையினர் பணிகளை மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது.எனவே வரி விலக்கு தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும்.

அதேபோல் ECH மருத்துவமனை வேண்டும் என்று கேட்டீர்கள் அதுவும் அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற கூடிய மாநாடாக இது இருக்கும்.

முதலமைச்சர் அவர்கள் 2 ஆண்டு கால ஆட்சியில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை நிறை வேற்றி உள்ளார்கள்.உங்கள் வலிகளையும் வேதனைகளையும் முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மெய்யநாதன் பேசினார்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் புனிதா, மகேஸ்வரி, மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, கிறிஸ்டோபர், சேர்மதுரை, ராமச்சந்திரன், பெரியதுரை, பூசைபாண்டியன், நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்) அந்தோணிசாமி (புளியங்குடி) நகர் மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, நகர துணை செயலாளர் மாரியப்பன் மாவட்ட பிரதிநிதி செய்யதுஅலி வழக்கறிஞர்கள் கண்ணன், ஜெயக்குமார், சதீஷ், மாணவர் அணி உதயகுமார், கார்த்தி, அப்பாஸ் அலி உள்பட கழக நிர்வாகிகள்,முன்னாள் படை வீரர்கள் குடும்பத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

மதுரை தெப்பக்குளம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகள் தனுஷ்கா (வயது 11) எல்.கே.ஜி. முதல் 6ம் வகுப்பு வரை தனக்கு கிடைத்த காசுகளை உண்டியல் மூலம் சேமித்து வைத்த தொகை ரூபாய் 7999, ராணுவ வீரர்களின் நலனுக்காக வழங்குவதாக அமைச்சர் மெய்யநாதனிடம் தெரிவித்தார். அமைச்சர் மெய்யநாதன் சிறுமி தனுஷ்காவை பாராட்டி பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்டப் பொருளாளர் மாடசாமி, துணைத் தலைவர் சாமியாபாண்டியன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

கழக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கக் கூட்டங்கள்!

வி.பி.இராஜன் - தமிழரசி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சிவகங்கை. மே 30 - சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் ஆலோசனையின் பேரில்கழக தலைவர் தளபதி அவர்கள் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டங்கள் ஒன்றிய, நகர ,பேரூர், கழக இளைஞரணி சார்பில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் முதல் நாள் 28ஆம் தேதி முதல் நாள் மாவட்டத்தில் கீழ்க் கண்ட ஐந்து இடங்களில் ஒன்றிய நகர இளைஞரணி சார்பில் நடைபெற்றது. இதில் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் தேரடி திடலில் ஒன்றிய கழக செயலாளர்வே.ஆரோக்கியசாமி தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரா.சௌந்திரராஜன் வரவேற்றுப் பேசினார்.

கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தலைமை கழக பேச்சாளரும் முன்னாள் எம்.எல்.ஏவுமான வி.பி. ராஜன் சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் சி. முத்து, திருமதி வனிதா கண்ணதாசன், திருமதி சாந்தா கருப்பசாமி, முருகேசன், அஜித்குமார் சி. குழந்தை சாமி, இலக்கிய அணி அரசு, தொண்டரணி பிரபு உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டி. தினேஷ் அரசு நன்றி கூறினார்.

கொல்லங்குடி. காளையார் கோவில் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் கொல்லங்குடி யில் ஒன்றிய அவைத்தலைவர் சுப.தமிழரசன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம். கென்னடி முன்னிலையில் சாதனை விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் முன்னாள் எம்.எல்.ஏ. வி.பி.ராஜன் தலைமை கழக பேச்சாளர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகள் முத்தூர் கருப்பையா திருமதி கண்ணாத்தாள் தென்னரசு மா.செல்லப் பாண்டி நைனா, சந்திரன், நேரு, சதீஷ்குமார், அசோக் , மிலிட்டரி பிரபு, ஆகாஷ், சீனிவாசன், பாலமுருகன், முத்தையா, முருகன், நாட்டரசன் கோட்டை பேரும் கழக செயலாளர் ஜெயராமன் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் நன்றி கூறினார்.

மானாமதுரை. பழைய பஸ் நிலையம் முன்பாக நகர இளைஞரணி அமைப்பாளர் மாரிக்கண்ணன் தலைமையில் துணை அமைப்பாளர் ராஜேஷ் முன்னிலையில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் அனல் அய்யாச் சாமி மானாமரை க.பொன்னுச் சாமி திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் துரை.ராஜாமணி, அண்ணாதுரை, கவர்மெண்ட் துணைத் தலைவர் பால சுந்தர், ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணைத் தலைவர் முத்துச்சாமி, மகளிர் அணி சண்முகப்பிரியா, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், செல்வகுமார், பாலாஜி, மூர்த்தி, பாஸ்கரன், ராஜேந்திரன், சங்கர், திருமுருகன், அன்னவாசல் சண்முகம், மாணவரணி கார்த்தி, மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் அதியமான்,பொதுக்குழு உறுப்பினர் ஜெய மூர்த்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தேவகோட்டை வடக்கு ஒன்றியத்தின் சார்பில் பாவன கோட்டையில் ஒன்றிய கழகச் செயலாளர் பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் சொர்ணலிங்கம், ராமதாசன், ரமேஷ் ,அஜித், முரசொலி, மேனகா பவுன்ராஜ், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருவேகம்பத்து. தேவகோட்டை தெற்கு ஒன்றியத்தின் சார்பில் திருவேகம்பத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் நாகனி ரவி முன்னிலையில் நடைபெற்ற தெருமுனை பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் இலக்கிய அணி அழகையா நிர்வாகிகள் விவசாய அணி ராஜபாண்டி கருப்பையா காதர்முகைதீன் சக்கரவர்த்தி ஜெயராணிசெல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் தேனி தெற்கு மாவட்ட சார்பில் மாவட்ட அவை தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர்கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மாநில தீர்மானக்குழு இணை செயலாளர் ஜெயக்குமார் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள்கழக முன்னோடிகள்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்

ரூ.1584 கோடி மதிப்பீட்டில் பல்வேறு குடிநீர் திட்டப் பணிகள்!

அமைச்சர்கள் கே.என்.நேரு - ஐ.பெரியசாமி அடிக்கல் நாட்டினர்!

சின்னாளபட்டி, மே 30 - ஆத்தூர் தொகுதி மக்கள் நலனுக்காக 34 வருடங்களாக அயராது உழைப்பவர் அமைச்சர் ஐ.பெரியசாமி என்று கன்னிவாடியில் நடைபெற்ற புதிய பேருந்துநிலைய திறப்பு விழாவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசினார். திராவிடமாடல்ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் உள்ளாட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு பொற்காலம் ஏற்பட்டுள்ளது என்று ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி புகழாரம் சூட்டினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1584.17 கோடி மதிப்பிலான பல்வேறு குடிநீர் திட்ட ப்பணிகள் அடிக்கல் நாட்டுவிழா மற்றும் ரூ.5.90 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகள் திறப்பு விழா, உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கன்னிவாடி பேரூராட்சியில் ரூ.5.90 கோடி மதிப்பில் புதிய நவீன பேருந்து திறப்புவிழா நடைபெற்றது.

விழாவிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமை தாங்கினார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிருவாக இயக்குநர் பா.பொன்னையா, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனோரஞ்சிதம், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்திய மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, வாழ்த்துரை வழங்கினார். விழாவில் கன்னிவாடி பேரூராட்சியில்; கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து தொடர்ந்து சித்தையன்கோட்டை மற்றும் நிலக்கோட்டை பேரூராட்சிகளில் ரூ.53.55 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிவிட்டு பேசுகையில் தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளில் கன்னிவாடி பேரூராட்சியில் ரூ.5கோடியே 90லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இந்த பேருந்துநிலையம் இயற்கை எழில்சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

தொகுதியின் அமைச்சராக இருக்கும் ஐ.பெரியசாமி தமிழகம் முழுவதும் சென்றாலும் தனது தொகுதியான ஆத்தூர் தொகுதியின் மீது தனி பாசம் கொண்டவர். கூட்டுற வுத் துறை அமைச்சராக இருந்த போது இரண்டு அரசு கலைக்கல்லூரிகளை கொண்டுவந்துள்ளார். இப்போது புதிய பேருந்து நிலையத்தையும் கொண்டு வந்துள்ளார். 1989ம் ஆண்டு முதல் 2023 இன்று வரை 34 ஆண்டுகள் தொகுதி மாறாமல் ஒரே தொகுதியில் போட்டியிட்டு தொகுதியில் மக்களோடு மக்களாக வளம் வருபவர் உங்கள் எல்லோராலும் ஐ.பி. என அன்போடு அழைக்கபடும் ஐ.பெரியசாமி என்றார்.

நான் கூட ஆரம்பத்தில் லால்குடி தொகுதியில் போட்டியிட்டு இப்போது திருச்சி தொகுதியில் மாறியுள்ளேன். ஆனால் நீங்கள் அவர் மீது அதிக அளவு பாசத்துடன் இருப்பதால் தான் ஐ.பெரியசாமி தொடர்ந்து ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார் என்றார்.

ஊரக வளர்ச்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசும் போது

கன்னிவாடி பேரூராட்சி பகுதியில் ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளி இடமாக இருக்கட்டும், பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி இடமாக இருக்கட்டும் தற்போது புதிய பேருந்து நிலையத்திற்கும் இடம் கொடுத்து உதவிய திருமலைசாமி ரெட்டியார் குடும்பத்தை சேர்ந்த ராஜ சேகரன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கன்னிவாடி பேரூராட்சியில் பல நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். தோனிமலைக்கு முதன்முதலாக தார்சாலை வசதி அமைத்து கொடுத்தது தி.மு.க. ஆட்சியில்தான். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாரிவழங்கும் வள்ளலாக கேட்டவுடன் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திற்கு ரூ.213கோடி ஒதுக்கீடு செய்து விரிவான காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த உள்ளோம். திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இராண்டுக்குள் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு ரூ.213 கோடி ஒதுக்கீடு செய்து நலத்திட்டங்கள் செயல்படுத்த உள்ளது என்றார்.

பேரூராட்சிகளில் உள்ள பொதுமக்களில் தனிநபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 135லிட்டர் தண்ணீர் கொடுக்க வேண்டும். அது விரைவில் நிறைவேறப்போகிறது. இதுபோல ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு தினசரி 35லட்சம் லிட்டர் தண்ணீர்; கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 12மாதங்களுக்குள் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள 24 ஊராட்சிகளுக்கும் குடிதண்ணீர் தங்குதடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள் பிச்சாண்டி, மாரியப்பன் கன்னிவாடி பேரூர்கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் பேரூர்கழக செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கீதா முருகானந்தம், சித்தையன்கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, சின்னாளபட்டி பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, செயல் அலுவலர்கள் சின்னாளபட்டி செல்வராஜ், சித்தையன்கோட்டை சிவகுமார், கன்னிவாடி ஜெயமாலு, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் புதுக்கோட்டை ரமேஷ், பன்றிமலை முத்து கிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோனூர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன், டி.புதுப்பட்டி அருணாச்சலம், ஒன்றியகுழு உறுப்பினர்கள் திருப்பதி, சுமதி கணேசன், ஜஸ்டின் மிக்கேல் அம்மாள், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் புதுப்பட்டி உதயக்குமார், கழக பேச்சாளர் ஜீவானந்தம், கன்னிவாடி பேரூராட்சி அவைத்தலைவர் சர்புதீன், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சரண்யா, மருதாயம்மாள், பாப்பாத்தி, சித்ரா, மகேஷ்வரன், உமா இந்திராகாந்தி, உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம் நன்றி கூறினார்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவிப்பு

பத்தாண்டு கால அவல ஆட்சியால் இருண்ட தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று, சீர்கேடுகளைக் களைந்து சிறப்பாக நிர்வகித்து, கொரோனா கால நெருக்கடிகளை திறம்பட கையாண்டு மக்களின் இன்னுயிரை காத்து, குழந்தைகளுக்கு ஊட்டசத்தை உறுதிசெய்யும் திட்டம் தந்து, மகளிர்க்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தை நடைமுறைபடுத்தி, உரிமை தொகை திட்டத்திற்கு உத்தரவிட்டு, மாணவ மாணவிகள் கல்வி பெறுதலை மேம்படுத்த நான் முதல்வன் புதுமை பெண் திட்டங்களை தந்து, இன்னுயிர்காக்கும் 48 மணிநேரம் மூலம் குடும்பநலன் காத்து, மாநில சுயாட்சியை வலியுறுத்தி, அரசு வேலை தமிழர்க்கே என்பதை நிலைநிறுத்தி, 1 டிரிலியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாட்டை வழிநடத்தி செல்லும் பார் வியக்கும் செயலாற்றல் வீரர், கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனையை விளக்கும் வகையில் இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் இளைஞரணி சார்பில் ஒன்றியம் நகரம் பேரூர் வாரியாக பின்வரும் இடங்களில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்..

நாள் : 30.05.2023 செவ்வாய்க்கிழமை		
முஞ்சிறை கிழக்கு ஒன்றியம்	மாலை 5 மணி ஆலன்கோடு வாவறை ஊராட்சி	வழக்கறிஞர் பிரவீன் வீர வர்க்கீஸ்
மேல்புறம் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி பாகோடு ஞாறாம்விளை	சிலம்பை டென்னிசன் ராஜபோஸ்
தக்கலை வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கோதநல்லூர் ஈத்தவிளை	சௌந்தர்ராஜ், இராஜ்
திருவட்டார் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கடம்பம் மூடு, பேச்சிப்பாறை	என்.ஆர்..மணி சுரேஷ் குமார்
நாள் : 31.05.2023 புதன்கிழமை		
கிள்ளியூர் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி பாலபள்ளம்	சௌந்தர்ராஜ் , இராஜ்
முஞ்சிறை மேற்கு ஒன்றியம்	மாலை 5 மணி சூழால்	என்.ஆர்.மணி சுபாஸ் சந்திரபோஸ்
திருவட்டார் தெற்கு ஒன்றியம்	மாலை 5 மணி குமரன்குடி மங்காடு	சிலம்பை டென்னிசன் சுரேஷ் குமார்
பத்மனாபபுரம் நகரம்	மாலை 5 மணி புலியூர்குறிச்சி	பிரவீன், வீர வர்க்கீஸ்
நாள் : 01.06.2023 வியாழக்கிழமை		
மேல்புறம் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி கண்ணுமாமூடு	சிலம்பை டென்னிசன்
குழித்துறை நகரம்	மாலை 5 மணி குழித்துறை	பிரவீன், ராஜபோஸ்
கிள்ளியூர் வடக்கு ஒன்றியம்	மாலை 5 மணி உண்ணாமலை கடை சந்திப்பு	சௌந்தர்ராஜ், சுபாஸ் சந்திரபோஸ்
கொல்லங்கோடு நகரம்	மாலை 5 மணி கச்சேரி நடை	பிரவீன், இராஜ்

அமைச்சர் மனோ தங்கராஜ்
செயலாளர், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க.

கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவிற்கு இணங்க மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆலோசனைப்படி இளைஞரணி சார்பில் ஜராவதநல்லூரில் இளைஞரணி அமைப்பாளர் மாமன்ற உறுப்பினர் காளிதாஸ் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர், மாமன்ற உறுப்பினர் செந்தாமரைக்கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மதன்குமார், சுரேஷ், பகுதி செயலாளர் மணிசேகரன், வட்டச் செயலாளர்கள் கரு.ஆறுமுகம், எம்.போஸ், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியின் ஈராண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக பேச்சாளர் மதுரை சாதுராஜன் பேசிய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.